**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 325/2024**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சிவன்பாண்டி | தொழில் | : | வொர்க் ஷாப் |
| கிராமம் | : | கொடிக்குறிச்சி | வயது | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 4th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கொடிக்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் வொர்க் ஷாப் வைத்து வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரியின் மகள் சத்யா என்பவரை எனது உடன்பிறந்த சகோதரர் முத்துலட்சுமணன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளோம். அவர்களுக்குள் குடும்ப பிரச்சனை இருந்து வந்தது. 19.11.2019 ம் தேதி, இரவு சுமார் 08.30 மணிக்கு எனது தம்பி முத்துலட்சுமணன் வீட்டிற்கு எதிரியின் மனைவி சரஸ்வதி என்பவர் குழந்தைகளை பார்ப்பதற்காக வந்திருந்தார். அப்போது எனது அம்மா ரேவதி முத்துலட்சுமணன் வீட்டிற்கு சென்றிருந்தார். அங்கு வைத்து எனது அம்மாவிற்கும், சரஸ்வதிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அதன் பின்னர் எனது தம்பி மனைவி அவரது அம்மா சரஸ்வதியுடன் வீட்டிற்கு சென்று விட்டார். குழந்தைகளை எனது தம்பி வீட்டில் விட்டு விட்டு சென்று விட்டார்.

20.11.2019 ம் தேதி, மதியம் சுமார் 02.00 மணியளவில் எனது வீட்டில் எனது அம்மா ரேவதியும், எனது மனைவி சுப்புலட்சுமியும் இருந்தார்கள்.

அப்போது எதிரி அரிவாளை தூக்கி கொண்டு வந்து எனது அம்மாவை பார்த்து "தேவடியா மவளே, உன்னால தான் எனது மகள் வாழ்க்கை வம்பாகி போனது" எனச் சொல்லி அரிவாளை வைத்து எனது அம்மாவின் கை, தலை, முட்டு, கால், மணிக்கட்டு, முகம், வாய், காது ஆகிய பகுதிகளில் மொத்தம் 19 வெட்டுகள் வெட்டினாார். எனது அம்மா கையால் அந்த வெட்டை தடுக்கவில்லை என்றால் கழுத்தில் வெட்டு விழுந்து எனது அம்மா இறந்திருப்பார். எனது மனைவி சத்தம் போடவும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாம் ஓடி வந்தார்கள். எதிரி அரிவாளை காண்பித்து எங்களையும் பக்கத்தில் வந்தால் வெட்டி விடுவேன் என்று மிரட்டி விட்டு அரிவாளுடன் ஓடி விட்டார். காயம்பட்ட எனது அம்மாவை தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக நானும், எனது தம்பி லட்சுமணன், எனது மனைவி சுப்புலட்சுமி ஆகியோர்கள் ஆட்டோவில் ஏற்றி கொண்டு போய் சேர்த்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னிடம் வாக்குமூலம் பெற்ற போது வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 17:22:04 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 325/2024**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரேவதி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பேச்சிமுத்து தேவர் | தொழில் | : | குடும்ப பொறுப்பு |
| கிராமம் | : | கொடிக்குறிச்சி | வயது | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 4th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கொடிக்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் குடும்ப பொறுப்புகளை கவனித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய மகன் முத்துலட்சுமணனின் மாமனார் ஆவார். எதிரியின் மகள் சத்யாவை எனது மகனுக்கு திருமணம் செய்து வைத்தோம். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு 19ம் தேதி, மாதம் ஞாபகமில்லை. ஒருநாள் என் மகன் முத்துலட்சுமணன் வீட்டிலிருந்தேன். அப்போது எதிரி அங்கு வந்து என்னிடம் சண்டை போட்டார். மறுநாள் நான் என் வீட்டிலிருந்தபோது என்னுடைய மகன் முருகன் வெளியே போயிருந்தார். அப்போது மத்தியானம் 12.00 மணியளவில் எதிரி அரிவாளுடன் வந்து என்னுடைய கழுத்திலும், இடது கையிலும், வலது கையிலும், முகத்திலும், இரண்டு காதுகளிலும், வாய்க்கு அருகிலும், நெற்றியிலும், தலையிலும், கால் முட்டியிலும் சுமார் 19 வெட்டுக்கள் வெட்டினார். (சாட்சி அவருடைய முகத்திலும், இடது கை, வலது கையிலும், வாய்ப்பகுதியிலும், நெற்றிபகுதியிலும், இரண்டு காதுகளிலும் உள்ள காயத்தழும்புகளை காண்பித்தார்.). பின்னர் அரிவாளை கொண்டு

சென்று விட்டார். எதிரி அரிவாளால் வெட்டும் போது வீட்டில் நான் மட்டும் தான் இருந்தேன். நான் காப்பாத்துங்க, காப்பாத்துங்க என்று சத்தம் போட்டேன்.

அப்போது பக்கத்து வீட்டிலிலுள்ள ஆண்களும், பெண்களும் வந்தார்கள். என்னை துணி போட்டு சுற்றி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். என்னுடைய மருமகள் சுப்புலட்சுமி என்னை எதிரி வெட்டின பிறகு அருகிலுள்ள அவருடைய வீட்டிலிருந்து வந்தார். என்னை முதலில் தென்காசி அரசு மருத்துவமனையிலும், பின்னர் திருநெல்வேலி அரசு மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள். அங்கு 15 நாட்கள் சிகிச்சை பெற்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாள் வைத்து தான் எதிரி என்னை வெட்டினார். அந்த அரிவாள் அ.சா.பொ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.02.04 17:22:16 +0530

# <u>வாக்குமூலம்</u>
## <u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
## <u>வழக்கு எண் : SC.No. 325/2024</u>
## <u>வழக்கு சாட்சி PW-3</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்புலட்சுமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | தவசி | தொழில் | : | குடும்ப பொறுப்பு |
| கிராமம் | : | கொடிக்குறிச்சி | வயது | : | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 4th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கொடிக்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் குடும்ப பொறுப்புகளை கவனித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய கொழுந்தன் முத்துலட்சுமணனின் மாமனார் ஆவார். அ.சா.1 முருகன் எனது கணவர். அ.சா.2 ரேவதி என்னுடைய மாமியார். ஏற்கனவே எனது கொழுந்தனுக்கும், அவருடைய மனைவி சரஸ்வதிக்கும் குடும்ப பிரச்சனை இருந்து வந்தது. 19.11.2019 ம் தேதி, எனது கொழுந்தனுடன் சரஸ்வதி சண்டை போட்டு பிள்ளைகளை வீட்டில் விட்டு விட்டு அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார்.

என்னுடைய மாமனார் சம்பவத்திற்கு 6 மாதத்திற்கு முன்பு இறந்து விட்டதினால், நான் மாமியார் வீட்டில் இருந்தேன். அ.சா.2 என்னுடைய அத்தை முத்துலட்சுமணன் வீட்டிற்கு சென்று பிள்ளைகளை பார்த்து வரச்சென்றார். அப்போது சரஸ்வதியின் அம்மா முத்துலட்சுமி அங்கு வந்துள்ளார். அப்போது என்னுடைய மாமியார் "நீ ஏன் வந்தாய்" என்று சத்தம் போட்டுள்ளார். அவர்கள் இருவருக்கும் அப்போது சண்டை வந்ததாக நான் கேள்விபட்டேன்.

பின்னர், மறுநாள் 20.11.2019 அன்று மதியம் சுமார் 01.30 மணிக்கு மேல் என்னுடைய கணவர் வீட்டிற்கு சாப்பிடுவதற்காக வந்து கொண்டிருந்தார். நான் என்னுடைய வீட்டில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். அப்போது திடீரென்று கத்தும் சத்தம் எங்கள் வீட்டில் கேட்டது. வந்து பார்த்தபோது, எதிரி அரிவாளால் என்னுடைய அத்தையை வெட்டிக்கொண்டு இருந்தார். நான் பார்க்கும் போது என்னுடைய அத்தை கையை வைத்து தடுத்து கொண்டிருந்தார். நான் வந்தபோது, "கிட்டே வந்தால் உன்னையும் வெட்டுவேன்" என்று கூறினார். நான் பயந்து போய் பின்னால் தள்ளிக்கொண்டேன்.

பின்னர் எதிரி அரிவாளால் என்னுடைய அத்தையை கையிலும், இரண்டு காது பகுதிகளிலும், முதுகிலும், தலையிலும், கால் முட்டுகளிலும் நிறைய இடங்களில் வெட்டினார். பின்னர் எல்லாரும் அங்கு வந்தார்கள். என்னுடைய கணவர் கடைசி வெட்டு வெட்டும்போது வந்தார். என்னுடைய கணவரை பார்த்தவுடன் எதிரி அரிவாளை போட்டு விட்டு ஓடிவிட்டார். பின்னர் நாங்கள் என்னுடைய மாமியாரை தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு முதலுதவி அளித்து விட்டு மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு சுமார் 40 நாட்களுக்கு மேல் என்னுடைய மாமியார் சிகிச்சை எடுத்துக்கொண்டார். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.பொ.1 அரிவாள் வைத்து தான் எதிரி என் மாமியாரை வெட்டினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 17:22:24 +0530